(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 22.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2025 பெப்ரவரி 19, புதன்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன,** சபாநாயகர்

**கௌரவ (டாக்டர்) ரிஸ்வி சாலி**, பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ (திருமதி) ஹேமாலி வீரசேகர**, குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ கலாநிதி ஹரினி அமரசூரிய,** பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) ஏ.எச்.எம்.எச். அபயரத்ன,** பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ கிரிஷாந்த அபேசேன,** விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர்

**கௌரவ அனுர கருணாதிலக்க,** நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர்

**கௌரவ கே.டீ. லால் காந்த,** கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்

**கௌரவ சுனில் குமார கமகே,** இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்

**கௌரவ ராமலிங்கம் சந்திரசேகர்,** கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர்

**கௌரவ குமார ஜயகொடி,** வலுசக்தி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) நலிந்த ஜயதிஸ்ஸ,** சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ (பேராசிரியர்) அனில் ஜயந்த,** தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி ஹர்ஷன நானாயக்கார,** நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) தம்மிக பட்டபெந்தி,** சுற்றாடல் அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) உபாலி பன்னிலகே,** கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சர்

**கௌரவ (திருமதி) சரோஜா சாவித்திரி போல்ராஜ்,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ பிமல் ரத்நாயக்க,** போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ ஆனந்த விஜேபால,** பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கே.வி. சமந்த வித்யாரத்ன,** பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்

**கௌரவ வசந்த சமரசிங்க,** வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) ஹினிதும சுனில் செனெவி,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,** கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ விஜித ஹேரத்,** வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ சதுரங்க அபேசிங்ஹ,** கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ நாமல் கருணாரத்ன,** கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ ஜனித ருவன் கொடித்துவக்கு,** துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ ரத்ன கமகே,** கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ எரங்க குணசேகர,** இளைஞர் விவகாரங்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ,** தொழில் பிரதி அமைச்சர்

**கௌரவ கமகெதர திசாநாயக்க,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ வசந்த பியதிஸ்ஸ,** கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை பிரதி அமைச்சர்

**கௌரவ முனீர் முலாபர்,** தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) சுசில் ரணசிங்ஹ,** காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி சுனில் வடகல,** பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ஹங்சக விஜேமுணி,** சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக பிரதி அமைச்சர்

**கௌரவ ரீ. பீ. சரத்,** வீடமைப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) நாமல் சுதர்சன,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) ஹர்ஷண சூரியப்பெரும,** நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர்

**கௌரவ பி. ருவன் செனரத்,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி பிரதி அமைச்சர்

**கௌரவ அருண் ஹேமச்சந்திரா,** வெளிநாட்டலுவல்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ நலின் ஹேவகே,** தொழிற் கல்வி பிரதி அமைச்சர்

---

**கௌரவ அஜித் அகலகட**

கௌரவ அமிர்தநாதன் அடைக்கலநாதன்

கௌரவ அபூபக்கர் ஆதம்பாவா

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி

கௌரவ சட்டத்தரணி யூ.பி. அபேவிக்ரம

கௌரவ (டாக்டர்) நிஹால் அபேசிங்ஹ

கௌரவ (டாக்டர்) இராமநாதன் அர்ச்சுனா

கௌரவ ஜே.சீ. அலவத்துவல

கௌரவ எம்.கே. எம். அஸ்லம்

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி

கௌரவ (கலாநிதி) (செல்வி) கௌஷல்யா ஆரியரத்ன

கௌரவ பீ. ஆரியவங்ஷ

கௌரவ (டாக்டர்) நஜீத் இந்திக்க

கௌரவ அர்கம் இல்யாஸ்

கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ ரவி கருணாநாயக்க

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி எம். நிசாம் காரியப்பர்

கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே

கௌரவ கதிரவேலு சண்முகம் குகதாசன்

கௌரவ வசந்த புஷ்ப குமார

கௌரவ சட்டத்தரணி சரத் குமார

கௌரவ (திருமதி) சட்டத்தரணி நிலந்தி கொட்டஹச்சி

கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்

கௌரவ லசித் பாஷண கமகே

கௌரவ சதுர கலப்பத்தி

கௌரவ அஜித் கிஹான்

கௌரவ (டாக்டர்) ஜகத் குணவர்தன

கௌரவ டி.வீ. சானக

கௌரவ கயான் ஜனக

கௌரவ அநுராத ஜயரத்ன

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ திலித் ஜயவீர

கௌரவ கோசல நுவன் ஜயவீர

கௌரவ ரீ.கே. ஜயசுந்தர

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர

கௌரவ மயில்வாகனம் ஜெகதீஸ்வரன்

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி

கௌரவ எம். ஏ. எம். தாஹிர்

கௌரவ (டாக்டர்) செல்லத்தம்பி திலகநாதன்

கௌரவ சாமர சம்பத் தசனாயக

கௌரவ சுகத் வசந்த த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ பழனி திகாம்பரம்

கௌரவ தனுர திசாநாயக

கௌரவ சட்டத்தரணி சுசந்த தொடாவத்த

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ மொஹமட் சாலி நழீம்

கௌரவ சுசந்த குமார நவரத்ன

கௌரவ (பேராசிரியர்) சேன நாணாயக்கார

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ அருண பனாகொட

கௌரவ நிமல் பலிஹேன

கௌரவ அஜித் பி. பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்

கௌரவ சட்டத்தரணி சித்ரால் பெர்னாந்து

கௌரவ ஸ்டெபனி பிரனாந்து

கௌரவ கந்தசாமி பிரபு

கௌரவ அமில பிரசாத்

கௌரவ ரோஹண பண்டார

கௌரவ நந்த பண்டார

கௌரவ பத்மசிரி பண்டார

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ ரவீந்திர பண்டார

கௌரவ விஜேசிரி பஸ்நாயக்க

கௌரவ ஜகத் மனுவர்ண

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ இம்ரான் மகரூப்

கௌரவ ருவன் மாபலகம

கௌரவ (கலாநிதி) நந்தன மில்லகல

கௌரவ இஸ்மாயில் முத்து மொஹம்மட்

கௌரவ தனுஷ்க ரங்கனாத்

கௌரவ சஞ்ஜீவ ரணசிங்ஹ

கௌரவ சுனில் ரத்னசிரி

கௌரவ ஆர்.எம். காமிணி ரத்நாயக்க

கௌரவ சுரங்க ரத்நாயக்க

கௌரவ அசோக சபுமல் ரன்வல

கௌரவ துரைராசா ரவிகரன்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ ஹர்ஷன ராஜகருணா

கௌரவ சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ

கௌரவ சுனில் றாஜபக்ஷ

கௌரவ (கலாநிதி) வீ.எஸ். இராதாகிருஷ்ணன்

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்

கௌரவ (திருமதி) தீப்தி வாசலகே

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ ஆர்.ஜீ. விஜேரத்ன

கௌரவ சட்டத்தரணி பிரியந்த விஜேரத்ன

கௌரவ ருவன் விஜேவீர

கௌரவ தர்மப்ரிய விஜேசிங்ஹ

கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹிருனி விஜேசிங்ஹ

கௌரவ அசித நிரோஷண எகொட வித்தான

கௌரவ ஜகத் விதான

கௌரவ திலிப் வெதஆரச்சி

கௌரவ அதுல வெலதகொட

கௌரவ சிவஞானம் சிறீதரன்

கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்

கௌரவ பஸ்மின் சரீப்

கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம்

கௌரவ தினிந்து சமன்

கௌரவ திலிண சமரகோன்

கௌரவ (டாக்டர்) நிஷாந்த சமரவீர

கௌரவ (செல்வி) அம்பிகா சாமிவெல்

கௌரவ (டாக்டர்) இளையதம்பி சிறிநாத்

கௌரவ தேவானந்த சுரவீர

கௌரவ சந்தன சூரியஆரச்சி

கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஜீ.டி.சூரியபண்டார

**கௌரவ சட்டத்தரணி அர்ஜுன சுஜீவ சேனசிங்ஹ**

**கௌரவ (டாக்டர்) ஜனக சேனாரத்ன**

**கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்**

**கௌரவ கபீர் ஹஷீம்**

**கௌரவ சந்திம ஹெட்டிஆரச்சி**

**கௌரவ சம்பிக ஹெட்டிஆரச்சி**

**கௌரவ (செல்வி) சட்டத்தரணி லக்மாலி ஹேமசந்திர**

திருமதி குஷானி ரோஹனதீர, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. சமிந்த குலரத்ன, பதவியணிப் பிரதானி மற்றும் பாராளுமன்றப் பிரதிச் செயலாளர் நாயகம்

திரு. ஹன்ஸ அபேரத்ன, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

1. **சபாநாயகரின் அறிவித்தல்கள் :** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்:— "எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குப் பாராளுமன்றக் குழுக்களில் விகிதாசாரமற்ற முறையில் ஆசனங்கள் ஒதுக்கப்படுவதால் பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை மீறப்படுவது தொடர்பாக 2025 பெப்ரவரி, 03 அன்று, கௌரவ ரவி கருணாநாயக்க, சட்டத்தரணி கௌரவ தயாசிறி, கௌரவ அஜித் பி. பெரேரா, கௌரவ (கலாநிதி) வீ.எஸ். இராதாகிருஷ்ணன், கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம் மற்றும் கௌரவ சனாதிபதி சட்டத்தரணி எம்.நிசாம் காரியப்பர் ஆகியோர் விடுத்த வேண்டுகோள்களின்படி, 2025 பெப்ரவரி 05 அன்று நான் வாக்குறுதியளித்தவாறு, பாராளுமன்ற சபாநாயகர் என்ற ரீதியில், இந்தக் குறித்த விடயம் பற்றி ஆராய்ந்து இந்த உயரிய சபைக்கு எனது நிலைப்பாட்டினை வெளிக்கூறத் தீர்மானித்தேன்.

அவ்விபரமான முடிவை நான் பின்வருமாறு குறிப்பிட விரும்புகின்றேன்:

1. ஆளும் கட்சியையும் எதிர்க்கட்சியையும் பிரதிநிதிப்படுத்துகின்ற இந்த உயரிய சபையின் பாதுகாவலன் என்ற ரீதியில், பாராளுமன்றத்தின் அலுவல்களை நடத்துவதில் நான் எப்பொழுதும் எனது பாரபட்சமின்மையைப் பேணிவருகின்றேன்.

2. குழுப் பிரதிநிதித்துவம் தொடர்பாகக் கௌரவ உறுப்பினர்கள் எழுப்பிய விடயம் தொடர்பாக பாராளுமன்ற (அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமைகள்) சட்டத்தின், எந்த வாசகத்திலும் தெளிவாக வலியுறுத்தப்படாததால், அச்சட்டத்தின்கீழ் எவ்வித சிறப்புரிமை மீறப்படவில்லை.

3. முன்னயை 7வது, 8வது மற்றும் 9வது பாராளுமன்றங்களினது குழுக்களின் ஆக்கவமைவு விடயத்தைக் கருத்திற்கொண்டு, பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளில் தடைபெறாமல் குழுக்களின் இரு கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு இரு தரப்பினரும் (ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி) உடன்பட்டிருந்தனர்.
   மேலும், குறிப்பாக பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு, அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கள் போன்ற சில குழுக்களில், இந்த ஆசனங்களின் எண்ணிக்கை 10வது பாராளுமன்றத்திலும், இரு தரப்புக்களினதும் தற்றுணிபில் அதிகரிக்கப்பட்டுள்ளது என்பதை நான் அவதானித்துள்ளேன்.

4. எம்.என். கவுல் மற்றும் எஸ்.எல். ஷக்தர் [M.N. Kaul and S.L. Shakdher] ஆகியோர் தாம் எழுதிய 'பாராளுமன்றச் செயல்முறை மற்றும் நடைமுறை (குறிப்பாக மக்களவை பற்றிய குறிப்புடன்)' என்ற நூலில் பின்வருமாறு தெளிவாகக் குறிப்பிட்டுள்ளனர் –

'பாராளுமன்றக் குழுவொன்று சபையினால் நியமிக்கப்படுகின்றது அல்லது தேர்வு செய்யப்படுகின்றது அல்லது சபாநாயகரினால் பெயர்குறித்து நியமிக்கப்படுகின்றது'. அந்நூல் மேலும் விபரிப்பதாவது, குழுக்களின் அலுவல்களை நடத்தத் தேவையான நியமனம், பதவிக்காலம், தொழிற்பாடுகள் மற்றும் முக்கிய நடைமுறை முதலியன விதிமுறைகளின் ஏற்பாடுகளினதும் சபாநாயகரின் பணிப்புரைகளினதும் பிரகாரம் ஒழுங்குறுத்தப்படுகின்றன. ஆதலால், இவ்வாறான தீர்மானங்களை எடுப்பதில், அந்தக் குழுக்களை அமைப்பதற்கு சபாநாயகரினால் நிலையியற் கட்டளைகளைப் பின்பற்ற வேண்டியிருந்தது.

ஒரு பாராளுமன்றக் குழுவுக்கான உறுப்பினர்கள், சபையில் ஒரு பிரேரணை முன்வைக்கப்பட்டு அது ஏற்றுக்கொள்ளப்பட்டுச் சபையினால் நியமிக்கப்படுகின்றார்கள் அல்லது தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள் அல்லது சபாநாயகரினால் பெயர்குறித்து நியமிக்கப்படுகின்றார்கள் என்பது மேற்கூறிய நூலின் 775 ஆம் பக்கத்தில் மேலும் விளக்கப்பட்டுள்ளது. ஆகையால், சபாநாயகர் தனது நடுநிலைமையினையும் பாரபட்சமின்மையினையும் பேணுவதற்கு, நிலையியற் கட்டளைகளின் வரையறைகளுக்குள் நடைமுறை எவ்வாறு கண்டிப்பாகப் பின்பற்றப்படுதல் வேண்டும் என்பதற்கான எழுத்திலான விதிமுறைகளை அவர் கடைப்பிடிக்க வேண்டும்

'குறிப்பிட்டவொரு பாராளுமன்றக் குழுக்களுக்கான உறுப்பினர்கள், சபை முதல்வரினதும், எதிர்க்கட்சி மற்றும் குழுக்களின் தலைவர்களினதும் ஆலோசனையை பெற்றதன் பின்னரே சபாநாயகரினால் பரிந்துரைக்கப்படலாம்' என இந்த நூலின் 776 ஆம் பக்கத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது".

எனவே, இந்த சபையில் உள்ள ஒவ்வொரு தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் சமரச முடிவை எடுப்பது சபையின் பொறுப்பாகும்.

5. எர்ஸ்கின் மே [Ershike May] என்ற அறிஞர் எழுதிய 'பாராளுமன்றத்தின் சட்டம், சிறப்புரிமைகள், நடவடிக்கைகள் மற்றும் பயன்பாடு என்பன பற்றிய ஆய்வு' என்ற நூல், உறுப்பினர்களை நியமிப்பதில், தெரிவுக் குழு அந்த உறுப்பினர்களின் தகுதிகளையும் சபையின் ஆக்கவமைவையும் கருத்திற் கொள்ளவேண்டும் எனத் தெளிவாகக் குறிப்பிடுகின்றது. ஆகையால், சபையின் கட்சி-அரசியல் ஆக்கவமைவினைக் குழு பிரதிபலிக்கின்றது என்பதைத் தெரிவுக் குழு எப்போதும் உறுதிசெய்யும். மேலும், ஒரு குழுவிற்குப் பெயர்குறித்து நியமிக்கப்படக்கூடிய உறுப்பினர்கள் எண்ணிக்கைக்கு வரையறை இல்லை என்ற விடயம் பொதுவாகத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. ஆதலால், முதலில் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவர்களைப் போலவே பின்னர் நியமிக்கப்படும் உறுப்பினர்களையும் உள்ளடக்குவதன் மூலம் குழுக்கள் விரிவாக்கப்படலாம்.

எனவே, குழுக்கள் தொடர்பான இந்த ஆக்கவமைவுக்கான சமன்பாட்டினை வகுத்தமைப்பதில், பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் அடிப்படைகளை மீறும் நிலையில் நான் இல்லை. எந்தவொரு கட்சியும் ஒரு குழுவில் பரிந்துரைக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கையை விடவும் அதிகமாக இருக்க வேண்டும் என்றால், ஒவ்வொரு தரப்பும் அது தொடர்பாக பேசித்தீர்மானிக்க வேண்டும்.

6. இறுதியாக, இந்த ஆசன ஒதுக்கீடுகளை சமரசமான முறையில் எவ்வாறு அதிகரிக்க முடியும் என்பது தொடர்பான இந்த பிரச்சினையை விரிவாகக் கலந்துரையாடும் பொருட்டு ஆளும் கட்சியும் எதிர்க்கட்சிகளும் ஒன்றுகூடுமாறு நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், மேற்கூறிய சட்டத்தின் அதிகாரங்களும் சிறப்புரிமைகளும் பற்றிய எந்தவொரு வாசகமும் தெளிவாக அதைக் குறிப்பிடாததால், பாராளுமன்ற உறுப்பினர்களின் எந்தச் சிறப்புரிமையும் மீறப்படவில்லை என்பதை நான் உறுதிப்படுத்துகின்றேன்.

7. பாராளுமன்ற ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக, இந்தப் பிரச்சினையின் கனதியைப் புரிந்துகொண்டு, இந்த விடயத்தினைத் தீவிரமாகக் கருத்திற்கொள்ளுமாறு நான் உங்களை வினயமாகக் கேட்டுக்கொள்கிறேன்."

**2. பத்திரங்கள் சமர்ப்பித்தல்:** (1) சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான இலங்கைப் பத்திரிகைப் பேரவையின் ஆண்டறிக்கையையும் கணக்குகள் கூற்றையும் சமர்ப்பித்து, அவ்வறிக்கை,கணக்குகள் கூற்று சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர், 2023 ஆம் ஆண்டுக்கான மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) சுற்றாடல் அமைச்சர், அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் சுற்றாடல் அமைச்சு தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர், 2023 ஆம் ஆண்டுக்கான தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) (i) மாவத்தகம, அரம்பொவத்த, இல. 143 இல் வதியும் திரு. டி.எம்.ஆர். ராஜசிங்கவினது 2024.12.07 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) மாவத்தகம, வெலிகம்புர, இல. 09 இல் வதியும் திரு. எம்.பி. குணவரத்னவினது 2024.12.19 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iii) வேஉட, பரகஹதெனிய, கண்டி வீதி, இல. 56 இல் வதியும் திரு. எம்.ஆர்.எஸ். ரஹ்மானினது 2024.12.28 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(iv) தொடம்கஸ்லந்த, மிபிட்டிய, கொன்கஹவத்த எனும் முகவரியில் வதியும் திருமதி ஆர்.எம். அனுலாவதியினது 2025.01.10 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ ஜே.சீ. அலவத்துவல சமர்ப்பித்தார்.

(2) (i) சாய்ந்தமருது – 14, நீர் வழங்கல் வீதி, இல. 541ஏ/1 இல் வதியும் திரு. ஏ.எல்.எம். முக்தாரினது 2024.12.03 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(ii) கலகெதர, கந்தெகும்புர, இல. 268, சேன பிரபாத் எனும் முகவரியில் வதியும் திரு. எம்.ஏ. விமலசேனவினது 2024.12.03 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ இம்ரான் மகரூப் சமர்ப்பித்தார்.

(3) கொட்டதெனியாவ, பொல்வத்த எனும் முகவரியில் வதியும் திருமதி கே.ஏ. ரஞ்ஜனி குமசுமலதாவினது 2024.12.01 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ அமில பிரசாத் சமர்ப்பித்தார்.

(4) (i) தெவனகல, ருவன்தெனிய, இல. டி– 78 இல் வதியும் திரு. ஜே.எம். எஸ்.டி.எஸ். பண்டாரவினது 2024.12.02 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(ii) ஹிங்குல, உடமாகடவர, எட்டம்பலந்த எனும் முகவரியில் வதியும் திரு. கே.எம். தசநாயக்கவினது 2024.11.18 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ நந்த பண்டார சமர்ப்பித்தார்.

(5) யட்டியந்தொட்ட, வீ ஓய, கொட்டுவெ கெதர எனும் முகவரியில் வதியும் திரு. எம். வில்மட் பெரேராவினது 2024.12.16 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ (கலாநிதி) நந்தன மில்லகல சமர்ப்பித்தார்.

(6) மாத்தளை, வாரியபொல வீதி, இல. 23/13 இல் வதியும் திரு. ஏ. சுந்தரலிங்கமினது 2024.12.11 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ (திருமதி) தீப்தி வாசலகே சமர்ப்பித்தார்.

(7) (i) நிட்டம்புவ, வேபடகல்ல, குருந்துவத்த, இல. 66/04 இல் வதியும் திரு. எச்.பி.டப்ளியூ. ஜயசேகரவினது 2024.11.26 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) கம்பஹா, முதுன்கொட, இல. 329/ஏ எனும் முகவரியில் வதியும் திருமதி எம்.கே. மாலா தர்மசிரியினது 2024.12.05 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iii) பள்ளேவெல, பனாவல்லந்த, இல. 46/2 இல் வதியும் திரு. ஆர்.எஸ். எஸ்.எச்.எம்.எச். தர்மபால ஹேரத்தினது 2024.11.26 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iv) நீர்கொழும்பு, தெற்கு கதிரான, ஜயபிம, இல. 27/1 இல் வதியும் திரு. எஸ்.ஏ. சோலித சுபசிங்கவினது 2024.11.29 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(v) எல்லக்கல, வலலியத்த, இல. 80/7 இல் வதியும் திரு. டப்ளியூ.ஏ.ஏ.டி. புஷ்பகுமாரவினது 2024.12.03 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(vi) பள்ளேவெல, போருக்கமுவ, இல. 64 இல் வதியும் திரு. டப்ளியூ. ஏ.ஏ.கே. அஜித் விக்கிரமசிங்கவினது 2024.12.01 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ தர்மப்பிரிய விஜேசிங்க சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**4. ஒதுக்கீட்டுச் சட்டமூலம் — (ஒதுக்கப்பட்ட இரண்டாம் நாள்):** ஒத்திவைக்கப்பட்ட விவாதத்தை ஆரம்பிப்பதற்கான கட்டளை வாசிக்கப்பட்டது. (2025 பெப்ரவரி 17பிரேரணை மீதானது), —

"சட்டமூலம் இப்போது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனும் பிரேரணை மீண்டும் எடுத்தியம்பப்பெற்று விவாதம் தொடர்ந்தது.

(மு.ப. 11.00 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

(பி.ப. 1.00 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

(பி.ப. 2.30 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

"கௌரவ (பேராசிரியர்) சேன நாணாயக்கார தலைமை தாங்குவாராக" என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 4.12 மணிக்கு கௌரவ (பேராசிரியர்) சேன நாணாயக்கார தலைமை தாங்கினார்.)

அவ்வேளை நேரம், பி.ப. 6.30 மணியாகிவிடவே, விவாதம் ஒத்திவைக்கப்பட்டது. விவாதம் மீண்டும் 2025 பெப்ரவரி 20 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறும்.

**5. ஒத்திவைப்பு:** அப்பொழுது, நேரம் பி.ப. 6.30 மணியாகிவிடவே, தலைமைதாங்கும் உறுப்பினர் இன்றைய தின சபைத் தீர்மானத்திற்கிணங்க பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைத்தார்.

அதன்படி பாராளுமன்றம், 2025 பெப்ரவரி 06 ஆம் திகதிய சபைத் தீர்மானத்திற்கிணங்க 2025 பெப்ரவரி 20 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 9.30 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.